**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST(POA) ACT,COIMBATORE.

Spl.S.C.No.98 of 2023

Prosecution witness - 5

| Name of Witness | PW-5 ஆனந்தராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father / Husband Name | இரவிச்சந்திரன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.04.2024.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் அஞ்சல் , கோவில்வெட்டி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி என்னுடைய நண்பர் ஆவார். கடந்த 2017ம் வருடம் நான் சூலூர் வட்டம், கோழிப்பண்ணை என்ற ஊரில் நானும், எனது நண்பர்கள் நான்கு பேரும் தங்கி கௌரி சங்கர் ஹோட்டலில் வேலை செய்து வந்தோம். அப்போது ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து நான் வேலையில்லாமல் சும்மா இருக்கிறேன், எனக்கு கல்யாணம் ஆகிவிட்டது, அதனால் நீ வேலை செய்யும் இடத்தில் எனக்கு வேலை வாங்கித்தர கேட்டுக் கொண்டதால் நான் ஆஜர் எதிரிக்கு வேலை வாங்கி கொடுத்தேன். ஆஜர் எதிரியும், அவரது மனைவியும் தனிவீடு எடுத்து வசித்து வந்தனர். கடந்த 16.08.2017 அன்று இரவு 9.00 மணியளவில் ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து தனது மனைவி பரமேஸ்வரி தன்னிடம் கோபித்துக் கொண்டு சென்றுவிட்டார், எங்கு போனார் என்று தெரியவில்லை என்று கூறி என்னை ஆஜர் எதிரி வீட்டிற்கு வருமாறு போனில் சொன்னார். அதன்படி நானும், எனது பைக்கில் ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்றேன். நானும், ஆஜர் எதிரியும் சேர்ந்து அவரது மனைவி பரமேஸ்வரியை தேடிப்பார்த்தோம்.

அதன்பிறகு கணியூர் பஸ் ஸ்டாப் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரியின் மனைவி பரமேஸ்வரி அங்கு நின்று கொண்டிருப்பதை பார்த்தோம். அங்கு சென்று பரமேஸ்வரியை இருவரும் சமாதானப்படுத்தினோம், சரி வீட்டுக்கு போகலாம் என்று, மூவரும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி எனக்கு பின்பும், பரமேஸ்வரி அவருக்கு பின்பும் அமர்ந்து, நான் பைக்கை ஓட்டி ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது திடீரென்று பரமேஸ்வரி பைக்கை விட்டு கீழே குதித்துவிட்டார். பரமேஸ்வரிக்கு தலை மற்றும் உடம்பில் பலத்த அடிபட்டுவிட்டது. உடனே ஆஜர் எதிரி ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார். ஆம்புலன்ஸ் வர தாமதமானதால் நானும், ஆஜர் எதிரியும் பைக் மூலமாக பரமேஸ்வரியை அருகிலிருந்த தென்னம்பாளையம் ரஞ்சன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முதலுதவி அளித்த மருத்துவர்கள் உடனடியாக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார்கள். உடனடியாக பரமேஸ்வரியை ஆம்புலன்ஸ் மூலம் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ஆஜர் எதிரி பரமேஸ்வரியுடன் ஆம்புலன்ஸில் வந்தார். நான் என்னுடைய பைக்கில் பின்தொடர்ந்து சென்றேன். பரமேஸ்வரியை பரிசோதித்த மருத்துவர்கள் இரவு 10.30 மணியளவில் பரமேஸ்வரி இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். உடனடியாக ஆஜர் எதிரி பரமேஸ்வரியின் பெற்றோருக்கு பரமேஸ்வரி இறந்த விபரத்தை போன் மூலம் தகவல் தெரிவித்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக தோன்றுவதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது-**

சிவமுருகன் பைக்கில் பரமேஸ்வரி ஏறிக்கொள்ள நான் எனது பைக்கில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது சிவமுருகனும், பரமேஸ்வரியும் பேசிக்கொண்டும், வாக்குவாதம் செய்து கொண்டும் வந்தனர் என்றும், அப்போது கொள்ளுப்பாளையம் பிரிவு அருகே வரும்போது திடீரென்று சிவமுருகனின் மனைவி பரமேஸ்வரி பைக்கிலிருந்து குதித்துவிட்டார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி என்னுடைய நண்பர் என்பதாலும், மற்றும் எதிரியும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரிக்கு சாதகமாக உண்மை சம்பவங்களை மறைத்து

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை -</u>**

இறந்து போன பரமேஸ்வரி பைக்கிலிருந்து கீழே தவறி விழுந்துவிட்டார் என்றால் சரிதான்.

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

(ஒம்) ஆர். நந்தினி தேவி, M.L.,DPM.,
அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம்,
பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல்
பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள்
தடுப்பு சட்டம், கோயமுத்தூர்.

23/04/2024